WORLD SAIVA COUNCIL (AUSTRALIA) INC.
உலக சைவப் பேரவை (அவுஸ்திரேலியா)
Postal Address: 6, Dudley Street, Auburn, NSW 2144
Tel: 0408 432 680 email: sabanathank@gmail.com

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு-35

ஆசிரியர்: சைவப்புலவர் முரு.சேமகரன்

(கவிஞர் கல்லோடைக் கரன்)

22-07-2026

இலக்கணத் தனிப் பொருள் வகுப்பு - 2, 29-7-2026
'பதம்'

சென்ற வகுப்பிலே பகுபதம், பகாப்பதம் என்பன பற்றியும், பகுபதத்தின் உறுப்புகள் 6 என்றும், அவையாவன:
பகுதி, விகுதி, இடை நிலை, சாரியை, சந்தி, விகாரம் ஆகுமெனவும், இவற்றில் பகுதி, விகுதி, இடைநிலை பற்றிய விளக்கங்களையும் பார்த்தோம்.

1 சாரியை :

பகுபதத்தில் பெரும்பாலும் இடை நிலை, விகுதி ஆகியவற்றிற்கு இடையிலும், சிறுபான்மை பிற இடங்களிலும் வரும் உறுப்பாகும். இது தனியாகப் பொருள் தராது. பகுபதங்களில் சாரியை வரவேண்டும் என்ற கட்டாயமில்லை.

எ-டு:

உண்டனன் - உண்+ட்+அன்+அன்.

இங்கு 'ட்' எனும் இடை நிலைக்கும், ஈற்றிலுள்ள 'அன்' எனும் விகுதிக்கும் இடையில் வந்த 'அன்' என்பதே 'சாரியை' எனப்படும்.

2 சந்தி :

ஒரு பகுபதத்தில் அமைந்துள்ள பகுதியையும், இடைநிலை, விகுதி முதலியவற்றையும் இணைக்கின்ற உறுப்பே 'சந்தி' எனப்படும். சந்தி பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் நடுவில் வரும். சிறுபான்மை வேறிடங்களிலும் வரலாம். சந்தி வரத்தான் வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

எ-டு:

படித்தான் - படி+த்+த்+ஆன். இங்கு படி யை அடுத்து வந்த 'த்' சந்தியாகும். இது ஏனைய உறுப்புகளைப் பகுதியோடு இணைப்பதைக் காண்க.

3 விகாரம்-

பகுதி, சந்தி ஆகிய உறுப்புகளில் உண்டாகும் மாற்றம் 'விகாரம்' எனப் படும். விகாரத்திற்கெனத் தனியான உறுப்பு இல்லை.

எ-டு:

கண்டான் - கண்+ட்+ஆன்

இதுவே காண்+ட்+ஆன் என்று வருதலே சரியானதாகும். பகுதி தொழிலை உணர்த்தும் ஏவலாகவே இருக்கும். ஆக மூன்று காலங்களுக்கும் 'காண்' என்ற ஒன்றே பகுதியாக இருக்க வேண்டும். இதுவே 'விகாரம்' ஆகும்.

எ-டு: நடந்தான் - நட+த்(ந்) + த் + ஆன். இங்கு பகுதியை அடுத்துள்ள 'த்' சந்தியாகும். இச் சந்தியைத் திரிபு செய்யாது எடுத்தால் 'நடத்தான்' என்றே வரும்.

ஆனால் 'நடந்தான்' என்பதே சொல் ஆகையினால், 'த்' என்ற சந்தி, 'ந்' எனத் திரிந்து விகாரமடைந்துள்ளது.

இதே போல ' வந்தாள் ' :

வா+த்(ந்) +த்+ஆள் எனும் போதும், 'த்' 'ந்' ஆகவும், 'வ' 'வா' ஆகவும் விகாரமடைந்தன கண்டு கொள்க.

விகாரங்கள் மூன்று வகை:

தோன்றல் விகாரம்-விகாரம்

ஒரு சொல்லில் புதியதோர் எழுத்து தோன்றுதல்:

பூ+கொடி = பூங்கொடி

திரிதல் விகாரம்:

ஓரெழுத்து வேறோர் எழுத்தாகத் திரிதல்

கல்+சிலை = கற்சிலை

தமிழ் மொழி/யாப்பு

இலக்கணத் தனிப் பொருள் வகுப்பு - 2 'பதம்', 29-07-2026

கெடுதல் விகாரம்:

ஒரெழுத்து இல்லாது கெடுதல்

மரம்+வேர்= மரவேர்

-தனிப்பொருள் வகுப்பு நிறைந்தது -

ஐயம் தெளிதல்

சிலவற்றை =

பலவற்றை =

இன் - சாரியை, விகுதி